**டிசம்பர் – 06**

# TNPSC துளிகள்

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது தேசிய மற்றும் சர்வதேசப் பங்காளர்களுடன் இணைந்து "யுவாஹ்" என்ற ஒரு புதிய முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
  - இந்த முன்னெடுப்பானது இந்தியாவை 10 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான கல்வி, திறன் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மொரீஷியஸ் நாட்டின் அதிபராக பிருத்விராஜ்சிங் ரூபன் என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இந்தியாவின முதலாவது குடியரசுத் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் பிறந்த தினத்தை நினைவு கூரும் வகையில் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 ஆம் தேதியன்று வழக்குரைஞர்கள் தினம் கொண்டாடப் படுகின்றது. இவர் தொழில் ரீதியில் வழக்குரைஞராகப் பணியாற்றினார்.
- இந்தியாவானது "இந்தியாவில் தயாரிக்கப்பட்ட" அதிவிரைவு இடைமறிப்பு விமானத்தை மாலத் தீவின் கடலோர காவல் துறையிடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்துள்ளது. இது மாலத்தீவின் கடல் பாதுகாப்பை மேம்படுத்தும் என்றும் நீலப் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது திவால் (நொடித்தல்) நடவடிக்கைகளுக்காக திவான் ஹவுசிங் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (Dewan Housing Finance Corp. Ltd - DHFL) என்ற நிறுவனத்தை தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்திற்குப் (National Company Law Tribunal - NCLT) பரிந்துரைத்துள்ளது.
  - இந்த நடவடிக்கையின் மூலம் சாத்தியமான கடன் தீர்விற்காக NCLTக்குச் செல்லும் முதலாவது நிதிச் சேவை நிறுவனமாக DHFL உருவெடுத்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## பசுமைப் பட்டாசுகளின் (சுற்றுச்சூழலுக்கு உகந்த) உற்பத்திக்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல்

- 'பசுமைப்' பட்டாசுகளின் வணிக ரீதியிலான உற்பத்திக்கு இந்திய உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தப் பசுமைப் பட்டாசுகள் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (Council of Scientific and Industrial Research - CSIR) மற்றும் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றால் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய ரசாயன கலவைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- இந்தக் கலவை விதிகளை உறுதிப்படுத்துவதற்காக பட்டாசு உற்பத்தியாளர்கள் "சோதனை அலகு" ஒன்றை அமைக்க வேண்டும். இது பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் பாதுகாப்பு அமைப்பால் கண்காணிக்கப்பட இருக்கின்றது.
- பசுமைப் பட்டாசுகளானது மாசுபாடுகளை 30% வரை குறைக்கும் திறன் கொண்டது.

## மையப்படுத்தப்பட்ட கங்கை நீர் ஆய்வகங்கள் @ டேராடூன்

- 2525 கி.மீ நீளமுள்ள கங்கை நதியில் காணப்படும் நீர்வாழ் உயிரினங்கள் நாட்டின் முதலாவது 'மையப்படுத்தப்பட்ட கங்கை நீர் ஆய்வகங்களில்' பாதுகாக்கப்பட இருக்கின்றன.
- இது டேராடூனில் உள்ள இந்திய வனவிலங்கு நிறுவனத்தில் (Wildlife Institute of India - WII) நிறுவப்பட இருக்கின்றன.
- நாட்டில் உள்ள எந்தவொரு நதிக்கும் இல்லாத இதே வகையைச் சேர்ந்த இந்த முதலாவது நீர் ஆய்வகமானது,
    - நதியில் காணப்படும் ஒவ்வொரு இனத்தின் மரபணுக்களையும் பராமரிக்க இருக்கின்றது.
    - நதியின் அடிப்படைத் தரவுகளைப் பதிவு செய்ய இருக்கின்றது.
- கங்கையின் துணை நதிகளான கோமதி, பெட்வா மற்றும் கோசி ஆகிய நதிகள் அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் உயிரியல் கூறுகள் இந்த ஆய்வகத்தில் பாதுகாக்கப்பட இருக்கின்றன.

## 14வது சூர்ய கிரண் இராணுவப் பயிற்சி

- இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையிலான ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியான 'சூர்ய கிரண் - XIV' என்ற பயிற்சியானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் தேதி முதல் 16 ஆம் தேதி வரை நேபாளத்தில் நடத்தப்பட இருக்கின்றது.
- இந்தப் பயிற்சியானது நேபாளத்திலும் இந்தியாவிலும் மாறிமாறி நடத்தப்படும் ஒரு வருடாந்திர இராணுவப் பயிற்சியாகும்.
- இந்தப் பயிற்சியின் முந்தையப் பதிப்பானது இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலத்தில் நடத்தப்பட்டது.

## யூரோமானிட்டர் இன்டர்நேஷனல்

- பிரிட்டனைத் தலைமையிடமாகக் கொண்ட யூரோமானிட்டர் இன்டர்நேஷனல் என்ற ஒரு ஆராய்ச்சி நிறுவனமானது உலகின் மிகவும் புகழ்பெற்ற 100 பயண இலக்கு (சுற்றுலா) இடங்களைக் கொண்ட தனது வருடாந்திர பட்டியலை வெளியிட்டுள்ளது.




- 2019 ஆம் ஆண்டில், தொடர்ந்து பத்தாவது ஆண்டாக ஹாங்காங் நகரம் உலகின்

முன்னணியில் உள்ள சுற்றுலாத் தலமாக இருக்கின்றது.

- இந்தப் பட்டியலில் உலக அளவில் டெல்லி நகரமானது 11வது இடத்தைப் பிடித்துள்ளது.

## போஷான் கீதம்


- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான எம். வெங்கையா நாயுடு "பாரதிய போஷான் கீதம்" என்ற கீதம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளார். இது "2022 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத நாடாக உருவாக்குதல்" என்ற செய்தியை நாட்டின் அனைத்து இடங்களுக்கும் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கீதமானது மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் கருத்தாக்கம் செய்யப்பட்டது. இது பிரசூன் ஜோஷி என்ற பாடலாசிரியரால் எழுதப்பட்டு, சங்கர் மகாதேவன் என்பவரால் பாடப்பட்டது.
- “போஷான் அபியான் அல்லது தேசிய ஊட்டச்சத்துத் திட்டமானது” 2018 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- விரிவான தேசிய ஊட்டச்சத்து ஆய்வு 2016-18ன் படி, ஐந்து வயதுக்கு உட்பட்ட இந்தியக் குழந்தைகளில் 34.7 சதவீதம் குழந்தைகள் வளர்ச்சி குன்றியிருக்கின்றார்கள்.

## உலக மலேரியா அறிக்கை 2019

- 2019 உலக மலேரியா அறிக்கையானது உலக சுகாதார அமைப்பினால் (WHO - World Health Organization) வெளியிடப்பட்டுள்ளது.
- உலகளவில், 2018 ஆம் ஆண்டில் 228 மில்லியன் நபர்கள் மலேரியா நோயினால் பாதிக்கப் பட்டிருந்தனர்.
- அதிக எண்ணிக்கையிலான மலேரியா நோய் பாதிப்பானது உலகில் ஆப்பிரிக்கப் பிராந்தியத்திலும் தென்கிழக்கு ஆசியாவிலும் பதிவாகியுள்ளன.
- நைஜீரியாவில் அனைத்து வித மலேரியா நோய் பாதிப்பானது 24% என்ற அளவில் மிக அதிக பாதிப்பு மிக்கதாக உள்ளது.

### *மலேரியா பாதிப்பு – இந்தியா*

- பிளாஸ்மோடியம் விவாக்ஸ் மலேரியாவின் பாதிப்பானது (நோயின் இரண்டாவது பொதுவான வடிவம்) இந்தியாவில் மிக அதிகமாக இருந்துள்ளது.
- இந்தியாவில் உள்ள 7 மாநிலங்களில் மட்டும் 90% மலேரிய நோய் பாதிப்புகள் நிகழ்ந்துள்ளன.
- இந்த 7 மாநிலங்கள் பின்வருமாறு: உத்தரப் பிரதேசம், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், குஜராத், ஒடிசா மற்றும் மத்தியப் பிரதேசம்.
- 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்தியா 2018 ஆம் ஆண்டில் 2.6 மில்லியன் அளவிற்கு குறைந்த மலேரிய பாதிப்புகளையே பதிவாக்கியுள்ளது.
- இது 85% மலேரியா நோய் பாதிப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளில் “மிகப்பெரிய முழுமையான மலேரயா நோய் குறிப்புகளைக்" கொண்ட ஒரு நாடாக இந்தியாவை உருவாக்குகின்றது.




## ஃபிட் இந்தியப் பள்ளி - உடற்தகுதி அடிப்படையில் பள்ளிகள் தரவரிசை

- ஃபிட் (உடற்தகுதி) இந்தியப் பள்ளிகள் என்ற ஒரு புதிய முன்னெடுப்பானது தொடங்கப் பட்டுள்ளது.
- இது பின்வருவனவற்றின் அடிப்படையில் இந்தியா முழுவதும் உள்ள பள்ளிகளின் தர நிர்ணய/தரவரிசைப் படுத்தும் ஒரு முறையாகும்.
    - பள்ளியில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே உடற்தகுதியை வளர்ப்பதற்கு அப்பள்ளியினால் வழங்கப்படும் முக்கியத்துவம்.
    - உடற்பயிற்சிக்காக அப்பள்ளியில் இருக்கின்ற வசதிகள்.
- ஃபிட் இந்தியப் பள்ளித் தரவரிசையானது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது - முதல் நிலைத் தரவரிசை கொண்ட ஃபிட் இந்தியப் பள்ளிகள், ஃபிட் இந்தியப் பள்ளி (3 நட்சத்திரத் தரவரிசை) மற்றும் ஃபிட் இந்தியப் பள்ளி (5 நட்சத்திரத் தரவரிசை).
- இந்தத் தரவரிசையை அடையும் பள்ளிகள் அதிகாரப்பூர்வ ஃபிட் இந்திய இலச்சினை மற்றும் அதன் கொடியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




### நீலக் கொடித் திட்டம்

- ‘நீலக் கொடி’ சான்றளிப்புத் திட்டத்திற்காக நாடு முழுவதும் உள்ள 13 கடற்கரைகளை மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் தேர்வு செய்துள்ளது.
- அடையாள சான்றளிப்பு செயல்முறையை முதலில் நிறைவேற்றிய கடற்கரை ஒடிசாவின் கோனார்க்கில் உள்ள சந்திரபாகா கடற்கரையாகும்.
- இது நீலக் கொடி சான்றிதழைப் பெறும் ஆசியாவின் முதலாவது கடற்கரையாக உருவெடுக்க இருக்கின்றது.
- கடற்கரைகள் மற்றும் துறைமுகங்கள் ஆகியவற்றிற்கான நீலக் கொடித் திட்டமானது சர்வதேச, அரசு சாரா, இலாப நோக்கற்ற அமைப்பான FEE என்ற அமைப்பால் செயல்படுத்தப் படுகின்றது.
- இது 1985 ஆம் ஆண்டில் பிரான்சில் தொடங்கியது. இது 1987 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பாவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.
- தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் நீலக் கொடிக் கடற்கரைகளைக் கொண்ட நாடுகள் ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியவையாகும்.
- இதுபோன்ற 566 கடற்கரைகளுடன் ஸ்பெயின் நாடு முதலிடத்தில் உள்ளது.
- சான்றிதழ் பெறுவதற்கான தகுதி நிலைகளில் கழிவுகளை அகற்றும் வசதிகள், மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த வசதிகள், முதலுதவி உபகரணங்கள் மற்றும் கடற்கரையின் முக்கிய பகுதிகளில் செல்லப் பிராணிகளுக்குத் தடை ஆகியவை அடங்கும்.

## பொருளாதாரச் செய்திகள்

### பாரத் பத்திரப் பரிமாற்ற வர்த்தக நிதி


- பாரத் பத்திரப் பரிமாற்ற வர்த்தக நிதியை (Bharat Bond Exchange Traded Fund - ETF) உருவாக்க மற்றும் அதனைத் தொடங்க மத்தியப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இது நாட்டின் முதலாவது பெருநிறுவன பத்திர ETF ஆகும்.
- இது மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள், மத்தியப் பொதுத்துறை அமைப்புகள்,

மத்தியப் பொது நிதி நிறுவனங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு கூடுதல் நிதி ஆதாரத்தை உருவாக்க இருக்கின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய கார்பன் அளவுநிலை (பட்ஜெட்) 2019

- உலகளாவிய கார்பன் திட்டமானது (Global Carbon Project - GCP) 2019 ஆம் ஆண்டிற்கான 'உலகளாவிய கார்பன் அளவுநிலை' (பட்ஜெட்) என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட GCP ஆனது அதிக அளவில் உள்ள 3 பசுமை இல்ல வாயுக்களுக்கான உலகளாவிய அளவு நிலைகளை வெளியிடும் ஒரு அமைப்பாகும். அவையாவன
  - கார்பன் டை ஆக்சைடு
  - மீத்தேன்
  - நைட்ரஸ் ஆக்சைடு
- 2019 ஆம் ஆண்டில் வளிமண்டல CO2ன் செறிவானது தொழில்துறைப் புரட்சிக்கு முந்தைய நிலைகளை விட 47% அதிகமாக இருக்கின்றது.
- புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் தொழில் துறையிலிருந்து உலகளாவிய CO2 உமிழ்வுகள் 1960 ஆம் ஆண்டுகளில் இருந்து ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கு ஒருமுறையும் அதிகரித்து வருகின்றது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவின் உமிழ்வானது (2.6 பில்லியன் டன் அல்லது ஜிகாடன்கள்) 2018 ஆம் ஆண்டில் இருந்ததை விட 1.8 சதவீதம் மட்டுமே அதிகமாக இருக்கும்.
- உமிழ்வு வீதங்களின் மெதுவான அதிகரிப்பானது பொருளாதாரத்தின் மிகவும் மெதுவான வளர்ச்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.



# மாநிலச் செய்திகள்

## பள்ளிக் குழந்தைகளுக்கான “மது” என்ற செயலி – ஒடிசா

- பள்ளி மாணவர்கள் தங்கள் பாடங்களை சிறந்த மற்றும் திறமையான முறையில் புரிந்து கொள்ள உதவுவதற்காக “மது” என்ற மின்னணு முறையிலான ஒரு கற்றல் கைபேசிச் செயலியை ஒடிசா மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒடிசாவின் முதலாவது பட்டதாரி மற்றும் வழக்குரைஞரான ‘உத்கல கௌரபா’ மதுசூதன் தாஸ் என்பவரின் நினைவாக இந்த செயலிக்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- இவர் "குலாபுருதா" என்று அழைக்கப்படுகிறார். அதாவது ஒடிசாவில் இதற்கு மிகவும் மிகவும் மூத்த மனிதர் என்று பொருள்படும்.

# விளையாட்டுச் செய்திகள்

## “ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட்” விருது

- நியூசிலாந்து கிரிக்கெட் அணிக்கு “கிறிஸ்டோபர் மார்ட்டின் - ஜென்கின்ஸ் ஸ்பிரிட் ஆஃப் கிரிக்கெட்” என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் லார்ட்ஸ் மைதானத்தில் நடத்தப்பட்ட சர்வதேச உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியின் போது இந்த அணியின் முன்மாதிரியான விளையாட்டுத் திறனுக்காக இந்த அணிக்கு இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- மார்ட்டின் - ஜென்கின்ஸ் என்பவர் எம்சிசி சங்கத்தின் (மேரிலேபோன் கிரிக்கெட் சங்கம்) முன்னாள் தலைவரும் பிபிசி டெஸ்ட் போட்டிச் சிறப்பு வர்ணனையாளரும் ஆவார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★